# குறுந்தொகை காட்டும் பொருளியல் கோட்பாடு

முனைவர் மோ.ஜ.மகேஸ்வரி,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி),
சேலம்-16.

ம.ஜெகதீஸ்வரி,
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி),
சேலம்-16.

**ABSTRACT**

It means that the people's lives are too poor to improve. Material accupies a great place in everyone's life. The life journey of today's people is moving in an environment where the rich are considered to the best. Therefore, It becomes an explanation of economic ideas found in kurundogai. In the way of short literature, the leader's separation from materialism, the leader's desire to separate from materialism, and the impotence of the heroine when the leader separates from materialism, clearly explain the need for material and the means to earn it, so the virtues performed with the help of material have also been highlighted.

## முன்னுரை

மக்களின் வாழ்க்கை மேம்பட்டு விளங்குவதற்கு மிகவும் இன்றியமையாததாய் இருப்பது பொருள். பொருள் அனைவரின் வாழ்விலும் சிறந்த இடத்தைப் பிடித்துள்ளது. பொருள்ளவரே சிறந்தோராகக் கருதப்படுகின்ற சூழலில், இன்றைய மக்களின் வாழ்க்கை பயணம் நகர்ந்து கொண்டிருக்கிறது. அக இலக்கியங்கள் அகமாந்தர்களின் வாழ்வியல் கூறுகளின் அடிப்படையில் பொருளியல் சிந்தனைகள் எடுத்துரைக்கின்றன. அந்த வகையில் குறுந்தொகையில் காணாலாகும் பொருளியல் சிந்தனைகள் குறித்து விளக்குவதே இதன் நோக்கமாகும்.

## பொருள் - விளக்கம்

இன்றையக் காலத்தில் செல்வங்களுள் சிறந்த செல்வமாய் பொருள் செல்வம் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது. அகப்புற வாழ்க்கை மேம்பட்டு அமைவதற்கு மிகவும் இன்றியமையாததாய் முக்கிய கூறாய் இருப்பது பொருள் என்னும் செல்வமாகும். இச்செல்வம் இருந்தாலே மக்களின் வாழ்க்கை செம்மையுடன் திகழும். இதனடிப்படையில் ‘பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை’ என்ற கருத்து மேலோங்கி விளங்குகின்றது. இதனாலே ‘பணம் பத்தும் செய்யும், பணம் என்றால் பிணமும் வாயைத் திறக்கும், பணம் பாதாளம் வரை பாயும்’ என்ற பழமொழிகள் தோன்றின எனலாம். இப்பழமொழிகள் அனைத்தும் பொருளின் தேவையையும் அதன் இன்றியமையாமையையும் எடுத்துரைக்கின்றன.

## குறுந்தொகையும் பொருளியல் சிந்தனைகளும்

பொருள் பற்றிய கருத்துகளை பல்வேறு தன்மைகளில் குறுந்தொகை இலக்கியம் பதிவு செய்துள்ளது. அதாவது பொருள்வயிற் கடைக்கூட்டிய நெஞ்சிற்குத் தலைமகன் சொல்லியது என்ற பொருண்மையிலும், உலகியல் கூறிப் பொருள் கடைக்கூட்டிய நெஞ்சிற்கு தலைவன் உரைப்பதாகவும் பல பாடல்கள் அமைந்துள்ளன. பொருளின் உயர்வு கருதிப் பிரியும் தலைவன் தனக்குத்தானே செலவழுங்குவதாகவும், தோழி தலைவனை செலவழுங்குவிப்பதாகவும் பல பாடல்கள் அமைந்துள்ளன. தலைவனின் செலவுக்குறிப்பறிந்து தலைவி வருந்தி காணப்படுகின்றாள். அப்போது தலைவிக்கு தோழி உரைப்பதாகவும், தலைமகன் பொருள்வயிற் பிரியப் பிரிவிடை ஆற்றாளாயத் தலைமகள் சொல்லியதாகவும் சில பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் பொருளின் இன்றியமையாமையை உணர்த்துவதாய் அமைந்துள்ளன.

## பொருள்வயிற் பிரிவிற்குரியோர்

இவ்வுலகில் மக்களாய் பிறந்தவர்கள் பிறரிடம் யாசிக்காமல் வாழ்வது சிறந்த வாழ்வாகும். அனைத்து மக்களுக்கும் பொருட்செல்வம் இன்றியமையாதது. அந்தவகையில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் என்னும் நால்வகை வருணத்தாருள் அரசரை ஒழிந்து ஏனையோர் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து செல்வர். அந்தணர், வணிகர் வேளாளர் ஆகியோருக்கு பொருள்வயிற் பிரிவு உண்டு என இலக்கணை, இலக்கியங்கள் எடுத்துரைக்கின்றன. ஆனால் அரசருக்கு பொருள்வயிற் பிரிவு உரியதாகாது. ஏனெனில் அரசன் தன் நாட்டிலுள்ள அனைத்து

செல்வங்களுக்கும் உரிமையுடையவர். பிற நாட்டிலுள்ள செல்வங்களையும் தனதாக்கி கொள்ளும் வல்லமை படைத்தவராவர். அரசர் பொருள் தேடி பிரிந்து செல்ல வேண்டி தேவை இருந்ததாகக் குறிப்பு எதுவும் காணப்படவில்லை. குறிப்பாக பொருள்வயிற் பிரிவு வணிகர், வேளாளருக்கும் உரிய பிரிவாகப் பெரிதும் போற்றப்படுகின்றது. இதனை,

**"பொருள்வயின் பிரிதலும் அவர்வயின் உரித்தே"[1]**

என்னும் தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கின்றது. அதாவது தூது செல்வதற்கு உரியோர்களாய் இருப்பவர்கள் அரசர், வணிகர், வேளாளர் என மூவருமாகும். இவர்களுள் அரசன் ஏவியப் பொருட்டு வணிகரும் வேளாளரும் தூது செல்வர். அரசனின் ஏவுதலால் தூது செல்லக்கூடிய வணிகர், வேளாளர் ஆகிய இருவரும் உறுதியாகப் பொருள் ஈட்டி வாழும் வாழ்வினையுடையவராகத் திகழ்வர். இவர்களோடு உயர்ந்தோர் என்றழைக்கப்படுகின்ற அந்தணர் ஒழுக்கத்தை முன்வைத்தே பொருள்வயிற் பிரிவினை மேற்கொள்வர் என்பதை,

**"உயர்ந்தோர் பொருள்வயின் ஒழுக்கத் தான"[2] தொல்.பொருள்-36**

எனும் தொல்காப்பிய நூற்பா வழி அறிந்துகொள்ள முடிகின்றது. எனவே வணிகரும் வேளாளரும் வணிகத்தொழில் முதலியவற்றால் பொருள் சேர்ப்பர். ஆனால் அந்தணர்கள் வணிகத் தொழில் செய்யாமல் இயற்கை ஒழுக்கமாகிய குடும்பத்திற்குரிய சடங்குகள், செயற்கை ஒழுக்கமாகிய கல்வி ஆகியவற்றைக் கற்றுக் கொடுத்துப் பொருளீட்டி வாழ்வர். எனவே பொருள் கொடுத்து கல்வி கற்ற தன்மையை புறநானூறு, பழமொழி நானூறு, ஏலாதி போன்ற நூல்களும் எடுத்துரைப்பது ஒப்பு நோக்கதக்கதாகும்.

**செய்பொருள் அச்சமும் வினைவயிற் பிரிவும்**

பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து செல்லும் தலைவன், தலைவியை அழைத்து செல்ல முடியாத நிலையை எண்ணி அஞ்சுவதே செய்பொருள் அச்சமாகும். செய்பொருள் அச்சத்திற்கு உரியவர் தலைவர் ஆவார். பிற அகத்திணை மாந்தர்கள் பாலை நில கொடுமையை நினைத்து அஞ்சுவது செய்பொருள் அச்சமாகாது. இல்வாழ்க்கை மேற்கொள்ளும் தலைவன் பொருள், வினை ஆகியவற்றின் காரணமாகத் தலைவியைப் பிரிந்து செல்வான். பொருள் காரணமாகப் பிரிவதற்குமுன் தான் செல்லுகின்ற கொடுமையான பாலைநில வழியின் இயல்பினைக் கூறி அச்சத்தைத் தலைவிக்கு தெரிவிப்பான். கொடுமையான பாலை நிலத்தின் இயல்பினை தலைவன் தலைவிக்கு எடுத்துரைப்பதால் தலைவன் அந்நில கொடுமைக்கு அஞ்சவில்லை என்பதையும் அக்கொடுமையான பாலை நிலத்தில் தலைவியை அழைத்து செல்ல முடியாத நிலையை எண்ணி அஞ்சும் தன்மையையும் அறிந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு தலைவன் அஞ்சுகின்ற தன்மையைக் கொண்டு தலைவன் பிரிந்து செல்வான் என்பதை தலைவி குறிப்பால் உணர்வாள். இதனை,

**"செய்பொருள் அச்சமும் வினைவயிற் பிரிவும்**
**மெய்பெற உணர்த்தும் கிழவிபா ராட்டே"[3]**

என்னும் தொல்காப்பிய நூற்பா விளக்குகின்றது. வினைவயிற் பிரிந்து செல்லும் தலைவன் தலைவியைப் புகழ்ந்துரைப்பான். இதன்மூலம் தலைவன் செல்லும் வழியை நினைத்து வருந்தினால் அது பொருள்வயிற் பிரிவு என்பதும் தலைவியைப் புகழ்ந்துரைப்பது வினைவயிற் பிரிவு என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது.

**பொருளால் தோன்றும் ஈதழும் துய்த்தலும்**

பொருள் என்பது ஒருவரின் வாழ்க்கைக்கு அறம் பெற ஈதல் பொருட்டும், இன்பம் பெற துய்த்தல் பொருட்டும் பயன்படும். வறியவனிடம் ஈதலும் துய்த்தலும் இல்லை என்பதை உகாய்க்குடிகிழார் குறுந்தொகைப்பபாடல் ஒன்றில் எடுத்துரைத்துள்ளார். அதாவது உலகில் காணப்படும் பல்வேறு தொழில்களைக் காட்டிலும் பொருள் ஈட்டல் என்னும் தொழிலே சிறந்த தொழிலாகும். அதனாலே தலைவனின் நெஞ்மும் பொருள் ஈட்ட நினைக்கின்றது. அப்படி பொருள் ஈட்டச் செல்லும் போது பெண்கள் உடன் செல்வது இல்லை. தலைவியின்றி என்னால் தனியாகச் செல்லமுடியாது என்று தன் நெஞ்சிற்கு தலைவன் உரைத்துள்ளப் பாங்கை எடுத்துரைத்துள்ளார். பொருள் ஈட்டுவதால் கிடைக்கும் இன்பத்தை விட தலைவியுடன் சேர்ந்து வாழ்வதால் கிடைக்கும் இன்பமே சிறந்தது என்றுரைக்கின்றான். இருப்பினும் பொருள் இல்லாதவர்களால் ஈதலும் துய்த்தலும் செய்ய இயலாது என்பதை,

**"ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல்**
**செய்வினை கைம்மிக எண்ணுறி; அவ்வினைக்கு**
**அம் மா அரிவையும் வருமோ**
**எம்மை உய்த்தியோ? உரைத்திசன் நெஞ்சே"[4]**

எனும் குறுந்தொகைப்பாடல் பாடல் மொழிகின்றது. அறம் பெற ஈதலும், இன்பம் பெறத் துய்த்தலும் ஆகிய காரியங்கள் பொருள் இல்லாத வறியவனிடம் காணப்படுவதில்லை. அதனால் பொருள் தேடுவதற்குரிய செயல்களை ஏனைய தொழில்களை விடச் சிறப்புடையதாக நெஞ்சே நீ நினைக்கின்றாய். அச்சிறந்த பொருளைத் தேடுவதற்குத் துணையாக அழகிய மாமை நிறத்தையுடைய தலைவியும் என்னுடன் வருவாளோ? அவளின்றித் தனியாக என்னைச் செல்லவிடுவாயோ என தலைவன் தன் நெஞ்சிற்கு வினவுகின்ற தன்மையை அறியமுடிகின்றது.

**பொருள் ஈட்டலும் மறுத்தலும்**

பொருள் ஈட்டும் தலைவன் அகத்திணை பாடல்கள் சிலவற்றில் பொருள் ஈட்ட மறுத்து தன் நெஞ்சிற்கு செலவழுங்குவிப்பான். இவ்வாறு செலவழுங்குதல் செய்வது செல்லாமை என்னும் சோம்பல் பண்பினை உணர்த்தாது. அதற்கு உண்மைக் காரணம் தலைவியைவிட்டு பிரிந்து செல்ல முடியாத நிலையையும் தலைமக்களின் அன்பின் திறத்தையும் உணர்த்துகிறது. இதனை,

**"செலவிடை அழுங்கல் செல்லாமை யன்றே**
**வன்புறை குறித்த தவிர்ச்சியாகும்"[5]**

எனும் நூற்பா வரிகளில் தொல்காப்பியர் சுட்டிக்காட்டியுள்ளார். இது இன்மையது இளிவு என்ற பொருண்மையில் தன்னை நாடி வருபவர்களுக்கு உதவி செய்தும் பகைவர்களை அழித்தும் வாழ்வதே ஆண்களுக்குரிய பண்பாகும் என்பதை விளக்குகின்றது. இதனை,

**"செறுவோர் செம்மல் வாட்டலும் சேர்ந்தோர்க்கு**
**உறும் இடத்து உய்க்கும் உதவி ஆண்மையும்**
**இல்இருந்து அமைவோர்க்கு இல்"[6]**

என்னும் அகநானூற்றுப் பாடலும் எடுத்துரைக்கின்றது. பொருளைத் தேடாமல் இல்லில் இருந்தோர்க்கு இசை, இன்பம், ஈதல் என்ற மூன்றும் இல்லாமல் போய்விடும். இம்மூன்று குணங்களோடு இருப்பதே சிறந்தது என்பதை,

**"இசையும் இன்பமும் ஈதலும் மூன்றும்**
**அசைவினர் இருந்தோர்க்கு அரும்புணர்வு"[7]**

எனும் பாடல் வரிகள் பறைச்சாற்றுகின்றன.

**பொருளும் அதன் இன்றியமையாமையும்**

பொருளை ஈட்டலும் அதனை காத்தலும் சிற்தத அரசிற்கு உரிய ஒரு பண்பாய் திகழ்கின்றது. எனவே எவ்வளவு முயன்று தேடியாவது தன்னை அருளி வேண்டியவர்களுக்குப் பொருள் கொடுத்து உதவுதல் வேண்டும் என்பதை,

**"அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்"[8]**

என்னும் கலித்தொகைப்பாடல் வரி சான்று பகர்கின்றது.

அற வாழ்க்கை வாழ்வதற்கும், தலைவியால் கிடைக்கப் பெறும் இன்பம் பெரிதென தலைவன் எண்ணினாலும் பொருள் ஈட்டல் என்பது ஆண்களுளக்கு ஒரு சாலச் சிறந்த பண்பாகும். பொருள் ஈட்டலினாலே உலகில் நற்செயல்கள் நடைபெறும். தலைவியை விட்டு பிரிய முடியாமல் செலவழுங்கத் தலைவனின் நெஞ்சம் எண்ணினாலும் பொருளே சிறந்த இடத்தை பெறும் என்பதற்கு சான்று பகரும் வகையில்,

**"பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்**
**பொருள்ளது இல்லை பொருள்"[9]**

எனும் குறளானது ஒரு பொருளாக மதிப்பதற்குத் தகுதியில்லாதவரையும் பிறர் மதிக்கும்படியாகச் செய்யக் கூடியது பொருட்செல்வம். அப்பொருளைக் காட்டிலும் வேறு எப்பொருளும் இல்லை என கருத்தை எடுத்துரைக்கின்றது.

**பொருளும் தலைவியும்**

தலைவியை விட்டு பொருள் தேட பிரிந்து செல்ல நினைக்கும் தன் நெஞ்சிற்குத் தலைவன் பொருளாகவும் அப்பொருளால் வரும் இன்பமாகவும் தலைவியே விளங்குகின்றாள் என கூறியுள்ளாள்ளான். இவ்வாறு தலைவன் கூறுவதன் மூலம் பொருள் தேட செல்ல மறுக்கமாட்டேன் என்று தலைவன் உரைக்கும் பாங்கு புலனாகின்றது.

பொருளாலே அறனும், இன்பமும் எய்த முடியும். அதனால் ஒருவற்கு பொருள் மிகவும் இன்றியமையாதது ஆகும். அத்தகைய பொருளைக் காட்டிலும் உயர்ந்ததாகவும் இன்பம் நிறைந்ததாகவும் இருப்பவள் தலைவியே என்று தலைவன் உரைக்கும் பாங்கை,

> **“மருந்து எனின் மருந்து வைப்பு எனின் வைப்பே**
> **அரும்பிய கணக்கின் அம்பகட்டு இளமுலை**
> **பெருந்தோள் நுணுகிய நுசும்பின்**
> **கல்கெழு கானவர் நல்குறு மகளே”[10]**

எனும் குறுந்தொகைப்பாடல் கானவர் நல்கிய அழகிய தலைவியைப் பிரிந்து போய்ப் தேடிய பொருளால் அறம் செய்து, அவ்வுலகில் துய்ப்பது மருந்து என்றால் இவளே அம் மருந்து ஆவாள். அப்பொருளினால் இவ்வுலகில் துய்ப்பது செல்வம் என்றால் இவளே அச்செல்லம் என்று தலைவன் உரைப்பதை எடுத்துரைகிறது. எனவே அக்காலம் முதல் இக்காலம் வரையிலும் பிணி நீங்க மருந்தாகவும், வறுமை நீங்கச் செல்வமாகவும் பெண்கள் காரணமாக இருக்கின்றனர். கொழுநன் பிணிக்கு மருந்தாகத் தம் உடம்பை அறுத்தத் தர முயலும் குலமகளும், அவன் தளர்கின்ற போது கூலிக்கு உழைத்து அவனைக் காப்பாற்றும் கற்புடையாட்டியாகவும் வாழும் பெண்களை இன்றும் உலகில் காணமுடிகின்றது.

**பொருளீட்டி மீண்டு வரல்**

பொருள் ஈட்டச் சென்ற தலைவன் பொருளை ஈட்டிக் கொண்டு வருகிறான். அவ்வாறு வரும் தலைவனிடம் தோழி பொருள் ஈட்டச் சென்ற தருணத்தில் எம்மை நினைத்தீரோ என்று கேட்கிறாள். அப்போது தலைவன் நும்மை மறக்கவில்லை என்று பதில் மொழி உரைக்கின்றான். இதனை,

> **“உள்ளினென் அல்லெனோ யானே? உள்ளி**
> **நினைந்தனென் அல்லெனோ பெரிதே! நினைந்து**
> **மருண்டனென் அல்லனோ, உலகத்துப் பண்பே”[11]**

எனும் குறுந்தொகைப் பாடல் வரிகள் வினைவயின் யான் இருந்தபோது இடைவிடாது நும்மை நினைத்தேன். அங்ஙன் எண்ணியதால் மீண்டும் மீண்டும் செய்யும் பொருளினும் நும் காம இன்பமே பெரிது என நினைவுக் கூர்ந்தேன் என தலைவன் எடுத்துரைக்கிறான். இந்நிலையில் தலைவியைக் காண வேண்டும் என்ற வேட்கை தலைவனுக்கு மிகுதியாய் இருந்தது. அப்போதும் அவன் வினையைக் கைவிடவில்லை. அதற்கு ‘வினையே ஆடவர்க்கு உயிர்’ என்ற உலக இயல்பே காரணமாகும். அதனால் பொருள் ஈட்டச் சென்ற தலைவனுக்கு காம வேட்கை பெருகாமல் இருக்கும். வினை முடித்து வரும் போதே தலைவியைக் காண வேண்டும் என்ற அவா மிகுதியாய்த் தோன்றும். ஆனால் தலைவி பற்றி நினைத்தீரோ என தோழி வினாவிய இடத்து தலைவன்,

**“பொய்மையும் வாய்மையிடத்து புரைத்தீர்த்து**
**நன்மை பயக்கும் எனின்”[12]**

என்னும் குறட்பாவிற்கு ஏற்ப தலைவனைப் பிரிந்து துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருந்த தலைவிக்கு இன்பம் விளைவிக்கும் பொருட்டு பொருள் ஈட்டச் சென்ற இடத்திலும் தலைவியை நினைத்து கொண்டிருந்தாக தோழியிடம் மொழிகின்றான். இதுவே உலகத்து இயற்கைப் பண்பாகும். எனவே வினையின் பொருட்டு சென்ற போது தலைவியைப் பற்றிய எண்ணம் தலைவனுக்கு இருக்காது என்பதையும் வினை வெற்றி பெற்றப்பிறகே தலைவியை நினைக்கும் பண்புடையவனாய் திகழ்கிறான் என்பதையும் அறியமுடிகின்றது.

**நிறைவுரை**

மக்களின் வாழ்க்கை மேம்பட்டு அமைவதற்கு பொருள் மிகவும் தேவையானதொன்று என்பதை குறுந்தொகை இலக்கியத்தின் துறைகளின் பொருண்மைகள் அடிப்படையில் அறியமுடிகின்றது. தலைவன் பொருள்வயிற் பிரிந்து செல்வதும், பொருள்வயிற் பிரிந்து செல்ல நினைக்கும் தன்னெஞ்சினை தலைவன் செலவழுங்குவிப்பதும், பொருள்வயிற் பிரிந்த போது தலைவியின் ஆற்றாமை நிலை ஆகியவற்றறின் மூலம் பொருளின் தேவையையும் பொருள் ஈட்டுவதற்கான வழிமுறைகளும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. பொருளின் துணைக்கொண்டு ஈதலும் துய்த்தலுமாகிய அறச்செயல் செய்வதற்கான வழிவகையும் விளக்கப்பட்டுள்ளன.

**அடிக்குறிப்புகள்**

1) இளம்பூரணர்(உ.ஆ),தொல்.பொருள்.நூ.எ:35, சாரதா பதிப்பகம்
2) மேலது,நூ.எ:36
3) மேலது,நூ.எ:228
4) வி.நாகராசன்(உ.ஆ),குறுந்தொகை,பா.எ:63, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
5) இளம்பூரணர்(உ.ஆ),தொல்.பொருள்.கற்பு.நூ.எ:44, சாரதா பதிப்பகம்
6) இரா.செயபால்(உ.ஆ),அகநானூறு,பா.எ:231, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
7) கு.வெ.பாலசுப்பிரமணியன்(உ.ஆ) நற்றிணை,பா.எ:214, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
8) விஸ்வநாதன்(உ.ஆ),கலித்தொகை,பா.எ:11, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
9) மு.வ,(உ.ஆ),குறள்,எ:751, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,1994
10) வி.நாகராசன்(உ.ஆ),குறுந்தொகை,பா.எ:71, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
11) மேலது,பா.எ:99
12) குறள்,எ:292,திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம்,1994